# மாலை முரசு

பக்கங்கள் 15 + 2

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 18 வெள்ளிக்கிழமை 04.10.2024 | அதிர்வு 64



## கழுத்து அறுக்கப்பட்டு தம்பதியர் படுகொலை

கணவன், மனைவி கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொடூர சம்பவம் அஹுங்கம, வல்ஹெங்கொட பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

07


'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### இலங்கை மீண்டெழ

# இந்தியா தொடர் ஆதரவு



## அநுரவிடம் ஜெய்சங்கர் உறுதி

"இலங்கையின் புதிய அரசுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும். இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கும்."

- இவ்வாறு உறுதியளித்தார் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர்.

02

# தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து களமிறங்க வேண்டும்

### வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிட்டால் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு தமிழ்ப் பிரதிநிதித்துவங்கள் இல்லாமல் போலும் அபாயம் உள்ளதால் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும்."

– இவ்வாறு வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

07






















## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்துப் பேசியபோதே மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று வெள்ளிக் கிழமை இலங்கை வந்தடைந்தார்.


அவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி அருணி விஜேவர்தன மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் வெளிவிவகார அமைச்சுக்கு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வரவேற்றார்.

இரு நாடுகளின் நீண்ட கால நட்புறவை வலுப்படுத்தி இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும், எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இரு அமைச்சர்களும் விவாதித்தனர்.

அதன்பின்னர் ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்தார்.

புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜெய்சங்கர், இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.



# ஜனாதிபதி - ஐ.எம்.எவ். குழுவினர் 2ஆம் நாளாகவும் கலந்துரையாடல்

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை வலுவாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் வகையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான இரண்டாம் நாள் சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.



சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீநிவாசன், சிரேஷ்ட தூதுக்குழு பிரதானி கலாநிதி பீற்றர் ப்ரூயர் உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக் குழுவினர் மற்றும் ஐ.எம்.எவ்.பேச்சுவார்த்தைகளுக்கான நியமிக்கப்பட்ட இலங்கையின் பிரதி நிதிகள் குழுவினரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்ளும் அதேநேரம், மக்கள் சுமைகளைக் குறைப்பதற்கான மாற்று வழியில் செல்வதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் நோக்கமாகும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.






# யாழ். பல்கலைக்கழக பொன் அகவை நாள் நிகழ்வுகள்: ஞாயிறன்று சர்வமதப் பிரார்த்தனையும் நிகழ்வுகளும்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு நாள் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சர்வமத நிகழ்வுடன் கொண்டாடப்படவுள்ளது.

பொன் அகவை நிறைவு நாளான அன்று பல்கலைக்கழகத்தில் உள்ள இந்து மாமன்றம், பௌத்த சகோதரத்துவ சமூகம், கத்தோலிக்க மாணவர் மன்றம் மற்றும் முஸ்லிம் மஜ்லிஸ் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பல்வேறு மதப் பிரார்த்தனைகள் இடம்பெற்று கைலாசபதி கலையரங்கத்தில் கூட்டு மத நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகமும், விசேட பூஜையும், சிறப்பு வழிபாடுகளும், பௌத்த சகோதரத்துவ சமூகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச மத்திய நிலையத்தில் பௌத்த மதப் பிரார்த்தனைகளும், காலை 6 மணிக்கு கத்தோலிக்க மாணவர் மன்ற ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக நல்லாயன் நிலையத்தில் விசேட ஆராதனைகளும், பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள இஸ்லாமியத் தொழுகை நிலையத்தில் இஸ்லாமிய மதப் பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளன.




தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார நுழைவாயில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

தொடந்து பலகலைக்கழக நலச் சேவைகள் கிளையால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள சர்வமத நிகழ்வுகள் கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணம் வளாகமாக 1974 ஒக்டோபர் 6ஆம் திகதி இலங்கையின் அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பொன் விழா நிகழ்வுகள் கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் இடம்பெற்று வருகின்றன.

பொன்விழாவையொட்டி பல்கலைக்கழகத்தால் மாநாடுகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் ஒரு அங்கமாக ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் மாநாடும், முத்தமிழ் விழாவும் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# யாழில் தொலைபேசி விளையாட்டுக்கு அடிமையான மாணவன் உயிர்மாய்ப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் தொலைபேசி விளையாட்டுக்கு அடிமையான பாடசாலை மாணவன் ஒருவன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் . நகரை அண்டிய பாடசாலை ஒன்றில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் தொலைபேசி விளை யாட்டுக்கு அடிமையாகி கடந்த மூன்று மாத காலப் பகுதிக்கு மேலாக பாட சாலைக்கு செல்லாது வீட்டில் இருந்து தொலைபேசி விளையாட்டில் ஈடுபட்டு வந்துள்ளார்.

மாணவன் பாடசாலைக்கு மூன்று மாத காலப்பகுதிக்கு மேலாக சமூகமளிக்காததால் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பெற்றோரின் கவனத்துக்கு அதனைகே கொண்டு சென்று மாணவனைப் பாடசாலை அனுப்புமாறு பெற்றோருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

அதனால் தந்தை மாணவனின் கையடக்கத் தொலைபேசியை பறித்து வைத்துள்ளார். அதனால் கோபமடைந்த மாணவன் வீட்டை விட்டு கடந்த மாதம் 25ஆம் திகதி வெளியேறிச் சென்றுள்ளான்.

மாணவன் மீண்டும் வீடு திரும்பாததால்பெற்றோர் அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

அந்நிலையில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிளிநொச்சியில் வசிக்கும் மாணவனின் உறவினர் ஒருவர், தனது வீட்டிலேயே மாணவன் தங்கி இருந்தார் எனக் கூறி மாணவனை அவனது பெற்றோரிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை மாணவன் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

மரணம் தொடர்பில் மரண விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் மாணவனின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன்!

## முன்னாள் அமைச்சர் பந்துல அறிவிப்பு



வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் இன்று வெள்ளிக்கிழமை அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஹோமாகம தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி 20 வருடங்களுக்கும் மேலாக அரசியலில் ஈடுப்பட்டுள்ளேன். இந்நிலையில், நான் பிரதி அமைச்சராகவும் அமைச்சரவை அமைச்சராகவும் செயற்பட்டுள்ளேன்.

குறித்த காலப்பகுதியில் என்னால் இயன்ற சேவைகளை மக்களுக்குச் செய்துள்ளேன்.

நீண்ட காலமாக நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்த ஹோமாகம தொகுதியை நான் பிரதிநிதித்துவப்படுத்தியமைக்கும், ஹோமாகம நகரை கல்வியின் மையமாக மாற்றியமைக்காகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலாநிதிப் பட்டத்தைப் பெறுவதற்காகக் கல்வியைத் தொடரவும், திரைப்படம் தயாரிப்பதற்கும் எனது நேரத்தைச் செலவிடத் திட்டமிட்டுள்ளேன்.” – என்றார்.





# ஜனாதிபதியின் செயலாளரைச் சந்தித்த ஐ.நா. அபிவிருத்தி வதிவிடப் பிரதிநிதி

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அஜூசா குபோடா நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கைக்குள் செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வது மற்றும் இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு இடையிலான ஒத்துழைப்பு வேலைத்திட்டம் குறித்தும் இதன்போது தீர்க்கமாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

இலங்கையின் புதிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஆர்வம் தொடர்பிலும் வதிவிடப் பிரதிநிதி இதன்போது ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுக்குத் தெளிவுபடுத்தினார்.

ஊழலுக்கு எதிரான அரசின் வேலைத்திட்டத்துக்குப் பாராட்டுத் தெரிவித்த அஜூசா குபோடா, அரச சேவையின் வெளிப்படைத் தன்மை மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத் துவதற்காக விரைவில் டிஜிட்டல் மய மாக்கலை நோக்கிச் செல்ல வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இந்த மறுசீரமைப்புகளை சரியான முறையில் மேற்கொள்வதற்காக டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பில் அரச ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டியது அவசியம் எனவும், இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கலுக்குப் பிரவேசிப்பதற்கு தேவையான திறன் மற்றும் அறிவு கொண்ட அரச அதிகாரிகளை உருவாக்குவதற்கான உதவிளை வழங்குவதற்கு ஐ.நா அபிவிருத்தி வேலைத்திட்டம் தயாராக இருக்கின்றது எனவும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஜனாதிபதி செயலாளரிடம் உறுதியளித்தார்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதிமன்றை நாடுவதே வழி

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பொதுத் தேர்தல் முடிந்த கையோடு நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டது.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தத் தேர்தல் அப்போதே நடந்திருக்க வேண்டும்.

அதிகாரத்திலிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு கீழ் இருந்த நிதி அமைச்சின் மூலம் இத்தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடுகளை அனுமதிக்காமல் வெட்டி, அதன் மூலம் தேர்தலை நடக்காமல் தடுத்து விட்டார்.

ஒரு பகுதி வாக்குச்சீட்டுகளும் அச்சிடப்பட்ட நிலை வரை முன்னேறிய இந்தத் தேர்தல் நடவடிக்கைகள் ரணில் விக்கிரமசிங்கவின் குசும்புத்தனமான நடவடிக்கையால் தடைப்பட்டு போய் நிற்கின்றன.

நாட்டின் ஏனைய தேர்தல்களைக் குழப்பாமல் இயன்ற விரைவில் நிலுவையில் உள்ள இந்தத் தேர்தலை நடத்தி முடிக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலும் நாடாளுமன்ற தேர்தலும் அடுத்தடுத்து வந்தமையினால் இந்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாமல் இருந்தது தேர்தல் ஆணையம். இப்போது - பொது தேர்தல் முடிந்த கையோடு - அதை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் தயாராகின்றது.

பொதுத்தேர்தல் முடிந்த பின்னர் இந்தத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கும் போது இத்தேர்தலுக்காக வேட்பு மனு தாக்கல் செய்து ஏறத்தாழ இரண்டு வருடங்கள் ஆகியிருக்கும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னரான வேட்பு மனுக்களின் அடிப்படையில் இப்போது தேர்தலை நடத்துவது என்பது பெரும் குழப்பத்தை தரவல்லது.

கட்சிகள், வேட்பாளர்கள், கூட்டணிகள் எல்லாமே இந்த இரண்டு வருடங்களில் தலைகீழாக மாறி இருக்கும் நிலைமை. வேட்பு மனு தாக்கல் செய்த சமயத்தில் ஒன்றாக இருந்த வேட்பாளர்கள் இப்போது ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் அரசியல் களேபரங்களில் அணி மாறிவிட்டார்கள். கட்சிகள் அணி மாறிவிட்டன. கூட்டுக்கள் குழம்பி விட்டன.

இந்தப் பின்புலத்தில் பழைய வேட்பு மனுக்களின் அடிப்படையில் தேர்தலை நடத்துவது பல்வேறு குழப்பங்களைத் தரும். ஆனால், அது விடயத்தில் தேர்தல் ஆணையம் எதுவும் செய்ய முடியாது. நிலுவையில் நிற்கும் உள்ளூராட்சித் தேர்தலை இயன்ற விரைவில் நடத்தி முடிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதால் அதைச் செய்வதை தவிர தேர்தல் ஆணையத்துக்கு வழி ஏதுமில்லை.

பழைய வேட்பு மனுக்களை ரத்துச் செய்யும் சட்ட ஒழுங்குகளை செய்வதற்கும் புதிய நாடாளுமன்றம் கூடி ஒரு கட்டமைப்பு ஏற்பட்ட பின்னர்தான் அது சாத்தியமாகும். அதற்கும் கூடப் பொது தேர்தல் முடிந்து வாரங்கள், மாதங்கள் பிடிக்கலாம். அதற்கு இடையில், நீதிமன்ற தீர்ப்பின்படி, உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளைத் தன்பாட்டில் தேர்தல் ஆணையம் ஆரம்பித்து விடும்.

இந்த நிலையில் இப்பிரச்சினையில் இருந்து வெளியே வருவதற்கு ஒரே வழி, சம்பந்தப்பட்ட தரப்புகள் உயர் நீதிமன்றத்தை நாடுவதுதான்.

இரண்டு வருடங்களுக்கு முந்திய வேட்பு மனுக்களின் அடிப்படையில் தேர்தலை நடத்தினால் இந்த இரண்டு வருட காலத்தில் புதிய வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்ட பல லட்சம் இளம் வாக்காளர்களுக்கு இத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காது, அது பெரிய ஜனநாயக மறுப்பு என்ற அடிப்படையில் உயர் நீதிமன்றத்தை நாடினால், புதிய வேட்பு மனு பெற்று அதன் அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கான உத்தரவு உயர் நீதிமன்றத்தில் இருந்து கிட்டும் என நம்ப முடியும்.



# முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம் இனத்துக்கே சேவை செய்கின்றனர்

## பத்தரமுல்ல சீலரத்ன தேரர் குற்றச்சாட்டு

(கே.வசந்தன்)

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது இனத்தூக்கி சேவை செய்கின்றார்கள் என்று ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

வன்னியில் இன்று வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. குறித்த தேர்தலில் ஜனசத பெரமுன கட்சி வடக்கு மாகாணத்திலும் போட்டியிடுகின்றது. இன, மத பேதமின்றி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதே எமது கட்சியின் நிலைப்பாடு.

வன்னியில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானால் அவர்கள் இன, மதம் பார்க்காது அனைவருக்கும் உதவி செய்கின்றார்கள். அதுபோல சிங்கள நாடா ளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானால் அவர்களும் இன, மத பேதமின்றி மக்களுக்குச் சேவை செய்கின்றார்கள்.

ஆனால், முஸ்லிம் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானால் அவர்கள் தமது இனத்துக்கு மட்டுமே சேவை செய்கின்றார்கள். ஆனால், நாம் வந்தால் வடக்கு, கிழக்கு, மலையகம் எனப் பாராது அனைத்து இன மக்களையும் ஒன்றிணைந்து அவர்களுக்கு இருக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்வோம்.” – என்றார்.

### தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், “நிலையான, கௌரவமான உரிமைகளுடன் கூடிய நிலையான அரசியல் தீர்வு கோரி எமது வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவானது 2022 கார்த்திகை 8 ஆம் திகதி சமஷ்டி தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வெளியிட்டிருந்தது.

இன்று வடக்கு – கிழக்கு தமிழ் பேசும் மக்களான நாம் எதிர்கொண்டு வரும் அரச இனவாத அடக்குமுறையில் இருந்து மீண்டு கௌரவமான, உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழ வேண்டுமாயின் நிலையான அரசியல் தீர்வே அவசியம்.

இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வுகள் பற்றி வாயளவில் கதைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வந்துவிட்டனர்.

எவ்வளவு காலத்துக்கு எமது வருங்கால சந்ததியினரும் இந்த அடக்குமுறைகளையும் ஏமாற்றங்களையும் அனுபவிக்கப் போகின்றனர்? எமது தலைமுறையுடன் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர ஒரு மக்கள் சமூகமாக ஒருங்கிணைந்து செயற்படுவோம்.

இதற்காக, அனைவரும் ஜனநாயக வழியில் நின்று செயற்படும் ஒரு சமூக இயக்கமாகப் பரிணமிக்க வேண்டும்.

இந்நிலையில், எமது வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவானது தமிழ் தேசியப் பரப்பிலுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் அரசியல் தலைமைகளுக்கு ஒரு பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்கின்றது.

இலங்கையின் குறிப்பாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போகும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், கட்சி ரீதியாக தனித்துப் போட்டியிடாமல் ஓர் கூட்டாக அல்லது கூட்டணியாகத் தேர்தலில் போட்டியிட்டு வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் அதிக மக்கள் பிரதிநிதிகளை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் கூட்டாக இணையாத சந்தர்ப்பத்தில் வாக்குகள் சிதறப்பட்டு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்கள் குறைவடைவதுடன், குறிப்பாக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களை இழக்க வேண்டி நேரிடும்.” – என்றனர்.

### கழுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்கேவத்தையைச் சேர்ந்த பி. ஜயசிங்க (வயது 67), அவரின் மனைவி கமனி வீரதுங்க (வயது 63) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மேற்படி தம்பதியின் மகள் சிகிச்சைக்காகக் கொழும்பு சென்றுள்ளார். இன்று வெள்ளிக்கிழமை காலை வீட்டிலிருந்த தந்தையின் தொலைபேசிக்கு மகள் அழைப்பு விடுத்த நிலையில் தந்தையிடமிருந்து பதில் இல்லாத காரணத்தால் உறவினர்களிடம் தந்தையைச் சென்று பார்க்குமாறு கூறியுள்ளார்.

அதன்படி, உறவினர் சென்று பார்த்த போது, வீட்டில் இரத்தக்கறை இருந்ததைப் பார்த்து பொலிஸாருக்குத் தகவல் அளித்துள்ளனர்.

பொலிஸார் சம்பவ இடத்தைச் சோதனை செய்தபோது, வீட்டுக்குள் தம்பதியர் கழுத்தறுத்துக் கொலை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அஹுங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஏற்பாட்டில்

# கனலி மாணவர் சஞ்சிகை ஐந்தாவது இதழ் வெளியீடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஏற்பாட்டில் கனலி மாணவர் சஞ்சிகை ஐந்தாவது இதழ் வெளியிடும் நிகழ்வு ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறீசங்கீர்த்தனன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணி தொடக்கம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமும் கலந்து கொண்டனர்.

சஞ்சிகையைகே கலைப்பீட பீடாதிபதி சி.ரகுராம் வெளியிட முதல் பிரதியை யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பெற்றுக்கொண்டார்.

யாழ். பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இடம்பெற்ற இந்தச் சஞ்சிகை வெளியீட்டில் மாணவர்களுக்கான வாழ்த்துரைகளை ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர் அனுதர்ஷி கபிலனும், சஞ்சிகைக்கான கருத்துரைகளை தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமாரும், சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம் ஆகியோரும் வழங்கினர்.

ஊடகக் கற்கைகள் துறையின் மூன்றாம் வருட மாணவர்களால் உருவாக்கப்பட்ட கனலி சஞ்சிகையானது முழுக்க முழுக்க மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கியே வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# நான்கு மாகாணங்களில் தாண்டவமாடும் டெங்கு




இலங்கையில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இவ்வருடத்தில் இதுவரை 39 ஆயிரத்து 698 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

குறிப்பாக, மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தற்போது 16 ஆயிரத்து 766 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளது இம் மாகாணத்திலேயே ஆகும்.

மேலும், வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் 4 ஆயிரத்து 792 நோயாளர்களும், மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 91 நோயாளர்களும், சப்ரகமுவ மாகாணத்தில் கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 4 ஆயிரத்து 12 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 19 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

# பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படுத்த எங்களோடு அணி சேருங்கள்!

## அழைப்பு விடுக்கிறார் சபீஸ்



(மாளிகைக்காடு)

தனிப்பட்ட சுயநலங்களுக்கு அப்பால் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படுத்துவதன் மூலம் எமது மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை உருவாக்குவோம்.

ஆகவே பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்த எங்களோடு அணி சேருங்கள் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், அக்கரைப்பற்று அமைப்பாளருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட பல்வேறுபட்ட கிராமங்களில் மக்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் போதே இதனைத் தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து அங்கு கருத்து தெரிவித்த அவர்,

இன்று பெரும்பாலான தாய்மார்கள் நாளை பற்றிய கவலையுடனும் அவர்களின் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய அச்சத்துடனே வாழ்கின்றனர்.

அந்த நிலைக்கு நாங்கள் முற்றுப் புள்ளி வைப்போம். சிறந்த பொருளாதாரத்தை ஏற்படுத்தவும் குழந்தைகளின் கல்வியில் மாற்றத்தை கொண்டு வந்து அவர்கள் சுய தொழில் முயற்சியாளர்களாக உருவாகவும் நாங்கள் அயராது அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.– என்றார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் சர்வதேச முதியோர் நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் சர்வதேச முதியோர் தின நிகழ்வு நாளை மறுதினம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 . 30 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

ஓய்வுநிலை மேலதிக அரச அதிபர் எஸ். ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கருத்துரைகளை ஓய்வு நிலை விரிவுரையாளர் அ. குமாரவேல், ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி சிவனொளிபாதம், யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவை மன்றஉதவிப் பணிப்பாளர் திருமதி வினோதினி ஆகியோர் வழங்குவர்.

பண்டத்தரிப்பு வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களால் வரவேற்பு நடனம், வில்லுப்பாட்டு ஆகிய கலை நிகழ்வுகள் நிகழ்த்தப்படும்.

அத்துடன் தொண்டைமானாற்றை சூழவுள்ள 70 ஆண், பெண் வயோதிபர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.



# கல்முனை சமூக மட்ட அமைப்புகளுடன் இரத்ததானம் தொடர்பில் கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வைத்தியசாலைகளில் ஏற்படும் குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இரத்ததான பணிகளைச் செய்யும் சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை (03) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எ.சீ.எம்.மாஹிர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் நசீக்க ஹசன்த, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.பிராஸ், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் கே.வித்யா, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஹெரிசானந் மற்றும் இரத்ததானப் பணிகளைச் செய்யும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.



# அம்பாறையில் ஏழு தமிழ்க் கட்சிகள் ஒரே குடையின் கீழ் போட்டியிட முடிவு!

## ஆசன ஒதுக்கீடு சின்னம் பற்றி ஓரிரு நாளில் தெரியவரும்

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள ஏழு தமிழ் தேசிய கட்சிகள் ஒரே குடையின் கீழ் ஒரே சின்னத்தில் போட்டியிட முடிவு செய்துள்ளன.

சிவில் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று (4) வியாழக்கிழமை இரவு காரைதீவு பொது நூலக கட்டடத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், இலங்கை தமிழரசுக் கட்சி, ரெலோ, புளட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ், ஜனநாயக முன்னணி , ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உட்பட பலர் பங்குபற்றியிருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஆறு தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டத்தில் பங்குபற்றிய கட்சிகளின் பிரதிநிதிகள் , அம்பாறை மாவட்ட நிலைமையில் தமிழ் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற ஓரணியில் போட்டியிட வேண்டும் எனும் கோரிக்கைக்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்திருந்தனர்.

கூட்டம் தொடர்பாக தமது கட்சி தலைமைகளுக்கு தெரியப்படுத்துவதாக கட்சி பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கொள்கை அளவில் இணங்கிய தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் பொதுத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் தொடரந்து ஒரு மணி நேரம் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்ட பொது கட்டமைப்பின் மத்திய குழு உறுப்பினரும், தமிழ் மக்கள் பொதுச் சபையின் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான இ.விக்னேஸ்வரன் மற்றும் அம்பாறை மாவட்ட சிவில் அமைப்பின் தலைவர் கண. வரதராஜன் ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இன்றைய கலந்துரையாடல் முதற்கட்ட வெற்றியாகும். அம்பாறை திருகோணமலை மாவட்டங்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு தமிழ் ஆசனத்தை காப்பாற்றும் வகையில் தமிழ் கட்சிகளை ஓரணியில் போட்டியிட வைக்கும் முயற்சிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

தமிழ் கட்சிகளின் தலைவர்களுடனும் பேசி வருகின்றோம். இன்றைய அம்பாறைக்கான கலந்துரையாடலில் தமிழ் தேசிய பரப்பில் உள்ள ஆறு கட்சிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தார்கள். முதற்கட்ட முயற்சி வெற்றியளித்துள்ளது. அடுத்து சின்னம், ஆசன பங்கீடு தொடர்பாக விரைந்து ஒரு கலந்துரையாடல் மூலம் ஒரு இணக்கப்பாட்டை எடுக்கும் முயற்சியில் எமது சிவில் சமூக கட்டமைப்பும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கட்சிகள் பிரிந்து நிற்பதால் மாவட்டத்தில் ஆசனம் இழக்கப்படும் என்பதால் தமிழ்க் கட்சிகள் இணைந்து போட்டியிட வேண்டும் எனும் கோரிக்கையின் அடிப்படையில் இந்த கலந்துரையாடல் காரைதீவில் இடம்பெற்றது.– என்றனர்.

இங்கு பங்குபற்றிய தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த தேர்தல் கூட்டில் தமிழ் தேசிய பரப்புக்கு வெளியில் உள்ள கட்சிகளை இணைக்க வேண்டாம் என தங்கள் கருத்தை கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கூட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு அழைப்பு விடுத்தும் கலந்து கொள்ளவில்லை என்று இணைப்பாளர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,

எமக்கு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி கிடைத்தது. அதாவது சங்கு சின்னத்தில் பொது வேட்பாளருக்கு இரண்டு லட்சத்துக்கும் அதிகமானதாகும். நாம் தமிழர்கள் ஒன்றாகவே இருக்கிறோம் என்பதை உலகுக்குச் சொல்லியிருக்கிறோம்.

அதே ஒற்றுமையை இந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் ஒன்றாக பயணிப்போம் என்பதை கூறவேண்டும். திருகோணமலையிலும் இதே ஒற்றுமை ஆயர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, ஆரம்பம் வெற்றி. இனி பொதுச் சின்னம் மற்றும் ஆசன பங்கீடு தொடர்பில் ஓரிரு நாள்களில் கலந்து பேசி முடிவுக்கு வரவுள்ளோம்.– என்றார்.





# ஜனாதிபதி சூழலியல் வெள்ளி விருதை வென்ற கல்முனை ஆதார வைத்தியசாலையில் பாராட்டு!

(வி.ரி. சகாதேவராஜா)

ஜனாதிபதி சூழலியல் வெள்ளி விருதை வென்ற கல்முனை ஆதார வைத்தியசாலையின் பாராட்டு விழா இன்று (04) வெள்ளிக்கிழமை வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் பணிப்பாளர் டாக்டர் ரங்க சந்ரசேன தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரும் கிழக்கு மாகாண பதில் மாகாண சுகாதார சேவை பணிப்பாளரும் கல்முனை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகருமான வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் ஆன்மீக அதிதிகளாக சிவஸ்ரீ கோபாலநிரோஷன், பற்றிமா தேசிய கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ. றெஜினோல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.



வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் தாஹிறா சபியுடீன், பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.இராஜேந்திரன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன், டாக்டர் என்.ரமேஸ், கணக்காளர் எம். கேந்திரமூர்த்தி, ஊடகவியலாளர் வி.ரி. சகாதேவராஜா, நிகழ்வின் அனுசரணையாளர் சரவணாஸ் உரிமையாளர் என்.பிரகலதன், கல்முனை நெற் பி.கேதீஸ் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக கலந்து கொண்டு விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தனர்.

நோயாளர் பாதுகாப்பு விருது மற்றும் ஜனாதிபதி சூழலியல் விருதைப் பெறுவதற்கு உதவிய அனைத்து தரப்பினருக்கும் நினைவு விருதுகள் வழங்கப்பட்டன.

வைத்தியசாலை ஊழியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் ஓய்வுபெறும் தாதிய உத்தியோகத்தர் திருமதி ஜெயந்தி மகேசன் பொன்னாடை போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.


குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

GUNAAM'S SUPER MARKET



Gunams supermarket super deal
நவராத்திரி விரத special deal
04.05,06/10/2024 Mega deal 100$ க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
3lb Brown sugar இலவசம்.
நிபந்தனைகளுக்குட்பட்டது.

Gunams supermarket.
1139 Morningside Ave Unit #33,
Scarborough,





# கல்முனை பிரதேச மூத்த மீனவர்கள் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை முஹியித்தீன் ஜும்மா பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப் பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீஃப் ஆகியவற்றின் நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில் பல காலமாக மீனவர்களாக பணிபுரிந்து ஓய்வுபெற்ற கல்முனை பிரதேசத்தின் மூத்த மீனவர்களை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கல்முனை கடற்கரைப்பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை தர்காவின் வருடாந்த கொடியேற்று நிகழ்வு மற்றும் அதன் வளர்ச்சியில் அதனை சுற்றி வாழ்கின்ற மீனவர் சமூகத்தின் பங்கு அளப்பெரியதாகும்.

அந்தவகையில் ஆழ்கடல் மற்றும் கரைவலை மீனவர்களில் தண்டையல் தரத்தில் பணிபுரிந்து ஓய்வடைந்த கல்முனை பிரதேசத்தின் மூத்த மீனவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கடற்கரை பள்ளிவாசல் நாகூர் ஆண்டகை எண்கோண மண்டபத்தில் இடம்பெற்றது.





# ஏறாவூர் விபுலானந்தா வித்தியில் புதிய சரஸ்வதி சிலை திறப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு, ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முத்தமிழ் தாயான சரஸ்வதி அம்மாளின் சிலை திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை (04) இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் பாடசாலையின் அதிபர் கோவிந்தன் திருநாவுக்கரசுவின் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களின் வேண்டுகோளுககு அமைய, பாடசாலையின் பழைய மாணவரான சந்திரமோகனின் நிதிப்பங்களிப்பில் இந்தச் சிலை நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அத்தோடு பாடசாலைக்கு அனைத்து விதங்களிலும் 



உதவிகள் செய்யும் 12 சமூர்த்திப் பயனாளிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






# கொழும்பு அல் ஹிதாயாவில் சிறுவர், முதியோர் நிகழ்வுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு அல் ஹிதாயா கல்லூரியின் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள் அண்மையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ஏ.பாத்திமா ஸறூனா தலைமையில் இடம்பெற்ற நிழ்வின் போது முதியவர்களுக்கும் சிறார்களுக்கும் சத்துகள் நிறைந்த பழங்களைக் கொண்ட கூடைகள் வழங்கப்பட்டன.

சிறுவர்களுக்கான பல்வேறு விளையாட்டு நிழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.






# கொக்கட்டிச்சோலை கமநல திணைக்கள 67 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை கமநலஅபிவிருத்தி திணைக்களத்தின் 67 ஆவது ஆண்டு நிறைவு விழா கொக்கட்டிச்சோலை கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது.

பெரும்பாக உத்தியோகத்தர் கோ. உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதியோர் மற்றும் சிறுவர் தின நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வரவேற்புரையை கமநல குழுத் தலைவர் ம. கோபாலரெத்தினம் வழங்கினார்.

அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட கமநலஅபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட பொறியியலாளர் எஸ். திவாகர், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், மாவட்ட கமநலஅபிவிருத்தி அதிகார சபையின் செயலாளர் இ.சுரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கொக்கட்டிச்சோலை கமநல அபிவிருத்தி சேவை நிலையத்துக்கு உட்பட்ட 25 கமநல அமைப்புகள் சேர்ந்து இதை நடத்தின.

இது ஒரு வார கால நிகழ்ச்சி திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.



### த.வெ.க. முதல் மாநாடு:

# தொண்டர்கள் ஆரவாரத்துடன் அதிகாலையில் பந்தல் கால் விழா

விக்கிரவாண்டியில் தமிழக வெற்றிக்கழக மாநாட்டு பணிக்காக இன்று அதிகாலை பந்தல் கால் நடப்பட்டது.

நடிகர் விஜய் கட்சியான தமிழக வெற்றிக் கழக மாநாடு இம் மாதம் 27 ஆம் திகதி விக்கிரவாண்டியை அடுத்த விசாலையில் நடைபெறுகிறது.

இம்மாநாட்டுக்கு கடந்த 25 ஆம் திகதி இரவு பொலிஸ் 17 நிபந்தனைகளுடன் அனுமதி அளித்தது. இதையடுத்து இன்று அதிகாலையில் மாநாட்டுக்கான பந்தல் கால் நடும் நிகழ்வு நடைபெற்றது. புதுச்சேரி விக்னேஷ் குருக்கள் தலைமையில் சபரீஷ் குருக்கள், சுந்தரேஸ்வர குருக்கள் மந்திரங்கள் சொல்ல மும்மதங்கள் சார்ந்த படங்களை வைத்து மும்மதம் சார்ந்த புனித நீர் தெளித்து பூஜை நடந்தது.

கட்சித் தொண்டர்களின் ஆரவாரத்துக்கு மத்தியில் இன்று காலை சரியாக காலை 4.50 மணிக்கு மாநாட்டிற்காக சென்னை மாநாட்டு பந்தல் அமைப்பாளர் ஆனந்தன் பந்தல் காலை நட்டார். அதைத் தொடர்ந்து த.வெ.க. மாநிலச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தொண்டர்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நேற்று இரவு பெய்த மழையால் மாநாட்டு மைதானம் சேறும் சகதியுமாக இருந்தது. என்றபோதும் சுமார் 5 ஆயிரம் பேர் அதிகாலை இருட்டு வேளையிலும் சிரமங்களைப் பொருட்படுத்தாது பந்தல் கால் நடும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர்.

இந்நிகழ்ச்சிக்காக தமிழகம் முழுவதுமிருந்து அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அம்மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற கோயில்களிலிருந்து தீர்த்தங்கங்கள் எடுத்துவரப்பட்டு பந்தல் கால் நடும்போது தெளிப்பதற்காக கட்சியினரால் கொண்டுவரப்பட்டது.

இதுகுறித்து பேசிய த.வெ.கவினர், “குறைந்தபட்சம் பந்தகால் நடும் பகுதியில் இருக்கை, குடிநீர் வசதிகளையாவது செய்து வைத்திருக்கலாம். நாங்கள் பொறுப்புடன் கொண்டு வந்திருந்த புனித நீரைப் பெற்று பந்தல் கால் நடும்போது தெளிக்கக்கூட யாருக்கும் அக்கறை இல்லை. நாங்களே ஆங்காங்கே நின்றபடி கொண்டு வந்த தீர்த்தத்தை தெளித்துவிட்டோம். மொத்தத்தில் சரியான ஒருங்கிணைப்பு இல்லை. இதற்கே இப்படி என்றால் மாநாட்டை எப்படி சொதப்பாமல் நடத்தப் போகிறார்கள் என்று தெரியவில்லை.” என்று ஆதங்கப்பட்டனர்.

இது குறித்து கருத்தறிய புஸ்ஸி ஆனந்த் தங்கி இருந்த தங்கும் விடுதிக்கு பத்திரிகையாளர்கள் சென்றனர். ஆனால், அங்கிருந்த பாதுகாவலர்கள் பத்திரிகையாளர்களை விரட்டி அடித்தனர். புஸ்ஸி ஆனந்தை சந்திக்க வேண்டும் என விழுப்புரம் மாவட்ட த.வெ.க. பொறுப்பாளர் பரணி பாலாஜியை தொடர்பு கொண்டு பத்திரிகையாளர்கள் சொன்னதற்கு, “5 நிமிடம் அங்கேயே காத்திருங்கள்” என்றார். ஆனபோதும், கடைசிவரை பத்திரிகையாளர்களை மாநிலச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் உள்ளிட்ட த.வெ.க. நிர்வாகிகள் யாரும் சந்திக்கவே இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.





# காவிரி உபரி நீர் திட்டத்தை வலியுறுத்தி கடை அடைப்பு

### பா.ம.க. போராட்டத்தால் பரபரப்பு

காவிரி உபரி நீர் திட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்தி, பா.ம.க. சார்பில் விடுக்கப்பட்ட அரை நாள் கடையடைப்பு போராட்டத்தால், அரூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் இன்று பெரும்பாலான கடைகள் அடைக்கப்பட்டுள்ளன.

காவிரி உபரி நீர் திட்டத்தை செயல்படுத்தி தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளிலும் நீர் நிரப்ப வேண்டும் என பா.ம.க. சார்பில் தருமபுரி மாவட்டம் முழுவதும் இன்று அரை நாள் கடை அடைப்புக்கு அழைப்பு விடப்பட்டிருந்தது.

அதன்படி போராட்டத்தினை ஒட்டி தர்மபுரி மாவட்டம் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, பொம்மிடி, கடத்தூர்,மொரப்பூர் உள்ளிட்ட பகுதிகளில், ஒரு சில கடைகள் தவிர பெரும்பாலான கடைகள் இன்று மூடப்பட்டுள்ளன.

கடத்தூர், பொம்மிடி, அரூர் ஆகிய ஊர்களில் உபரி நீர் திட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்தி உழவர் பேரியக்க மாநிலச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. வேலுசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பா.ம.க. மாவட்ட செயலாளர் அரசாங்கம், மாநில நிர்வாகிகள் செந்தில், இமயவர்மன் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் உபரிநீர் திட்டத்தை வலியுறுத்தும் கோரிக்கை பதாகைகளை கைகளில் ஏந்தியிருந்தனர். இன்றைய போராட்டத்தை முன்னிட்டு அரூர் காவல் கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ஏராளமான பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



# பாலஸ்தீன் உணவகம் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்

## பலி எண்ணிக்கை உயர்வு

பாலஸ்தீனில் உள்ள அகதிகள் முகாமில் உள்ள உணவகம் ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்துவதற்கு ஜெட் விமானங்களைப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் ஹமாஸ் அமைப்பைத் தலைமை தாங்கிய ஷகி யாஷிர் அப்துல் ராஷிக்கே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, தெற்கு பெய்ரூட்டில் உள்ள பொதுமக்களை அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறுமாறு இஸ்ரேல் இராணுவம் அறிவுறுத்தியுள்ளது.

அந்தப் பகுதியில் வான்வழித் தாக்குதலை நடத்துவதற்கு முன்னர் இஸ்ரேல் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# லெபனான் சர்வதேச விமான நிலையம் மீது இஸ்ரேல் தாக்குதல்: 37 பேர் உயிரிழப்பு

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள ரஃபிக் ஹரிரி சர்வதேச விமான நிலையம் அருகே ஹிஸ்புல்லா இலக்குகள் மீது இஸ்ரேலிய நடத்திய தாக்குதலில் 37 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் லெபனானில் வரையறுக்கப்பட்ட தரைவழி தாக்குதல்களை மேற்கொள்வதாக அறிவித்து, லெபனானின் முக்கிய பகுதிகளில் வான்வழி தாக்குதல்களை நடத்தியது.

மேற்படி தாக்குதல் இஸ்ரேலிய படை நுழையக் கூடிய இடங்களான ஒடெய்சா மற்றும் கெஃபார் கிலா ஆகிய இடங்களில் ஹிஸ்புல்லா போராளிகளை அழிப்பதற்காக நடத்தப்பட்டது.

இதனையடுத்து, ரஃபிக் ஹரிரி சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் நேற்று பலத்த வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

மேற்படி வெடிப்பு சம்வத்தில் 37 பேர் உயிரிழந்துள்ளனர். 151பேர் காயமடைந்துள்ளனர் என லெபனான் சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 02

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 04/10/2024

## இலங்கைப் பெண் கனடாவில் கொலை

கனடா இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஸ்காபரோ Ellesmere and Orton Park பகு 02




# வாகனங்களை அபகரிக்கும் சம்பவங்கள் குறைவடைந்தன

**யோர்க் பிராந்தியத்தில் வாகனங்களை அபகரிக்கும் சம்பவங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**யோர்க் பிராந்திய பொலிஸார் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.**

**கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் வாகனங்களை அபகரிக்கும் சம்பவங்களின் எண்ணிக்கை 31 வீதமாக குறைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.**

இந்த ஆண்டில் இதுவரை 2440 வாகனங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் இதே காலப் பகுதியில் 3460 வாகனங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன

சுமார் 80 வாகனங்கள் மீட்கப்பட்டதாகவும் இவற்றின் பெறுமதி ஐந்து மில்லியன் டொலர்கள் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறு எனினும் கார் அபகரிக்கும் சம்பவங்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது பிராந்திய வலயத்தில் கார் அபகரிக்கும் சம்பவங்களின் எண்ணிக்கை 106 வீதமாக அதிகரித்துள்ளது.



# குறைந்த வருமானத்தை பெறுபவர்களுக்கு நிவாரண கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

கனடாவில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிவாரண கொடுப்பனவு வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் பிரதிப் பிரதமரும் நிதி அமைச்சருமான கிறிஸ்டிய ப்ரீலாண்ட் இந்த விடயத்தை அறிவித்துள்ளார்.

கனடிய மக்களிடம் அறவீடு செய்யப்பட்ட வரித்தொகை இவ்வாறு மீள வழங்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். பொருள்கள் சேவைகள் வரி மற் றும் விற்பனை வரி போன்றன இவ் வாறு மீள வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய மற்றும் குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் இந்த திட்டத்தின் கீழ் பயனடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

குடும்பம் ஒன்றின் தேறிய வருமானம் மற்றும் 19 வயதுக்கு கீழ் பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை ஆகிய காரணிகளின் அடிப்படையில் இந்த கொடுப்பனவுத் தொகை நிர்ணயம் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.



# இணைய வழி துன்புறுத்தல் தடைச் சட்டத்தை அமல்படுத்துமாறு கனடாவில் கோரிக்கைகள்

இணைய வழி துன்புறுத்தல் தடைச் சட்டத்தை அமல்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவில் பெரும் எண்ணிக்கையிலான தாய்மார் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இணைய வழியில் தங்களது பிள்ளைகள் துஷ்பியோகத்திற்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.


எனவே இந்த புதிய சட்டத்தை அமல்படுத்துவது அத்தியாவசியமானது என தெரிவித்துள்ளனர்.


பில் சீ-63 என்ற இந்த உத்தேச சட்டம் அமல்படுத்தப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் சட்டவிரோதமான உள்ளடக்கங்கள் பிரசூரமாவதை தடுப்பதற்கு இந்த சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்த சட்டம் ஏற்கனவே கனடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் இரண்டாம் வாசிப்பு நிலையில் இன்னமும் காணப்படுகின்றது.

இணையவழியில் சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு இந்த சட்டம் வழியமைக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.





# பொலிஸ் உத்தியோகத்தர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது

## ரொன்ரோவின் மிட் டவுன் பகுதியில் சம்பவம்

ரொன்ரோவின் மிட் டவுன் பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மிட் டவுன் பகுதியில் இடம்பெற்ற கொள்ளை சம்பவம் ஒன்று தொடர்பிலான விசாரணைகளில் ஈடுபட்டிருந்த நேரம் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

யோங் மற்றும் எக்லின்டன் வீதிகளுக்கு அருகாமையில் இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

29 வயதான பொலிஸ் உத்தியோக உத்தியோகத்தர் ஒருவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

## இலங்கைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியில் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 54 வயதுடைய துஷி லக்ஷ்மணன் என்ற பெண் கொல்லப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மற்றுமொரு தமிழர் கைது செய்யப்பட்டுள்ளார்.

50 வயதான ராகுலன் லக்ஷ்மணன் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் உயிரிழந்த பெண்ணின் சகோதரர் என தெரிவிக்கப்படுகிறது.

கொலைக்கான காரணம் வெளியாகவில்லை. கொலை தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.